24.1.2019

அ.வ.எண்: 62/2015

பெயர்: ஆனந்தநாயுடு

வா.சா:1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் 5 வரை படித்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்து கொல்லகுப்பம் ஊருக்கு பாதியப்பட்டது. தாவா சொத்து கிராமநத்தம் புறம்போக்கு. முதல் வாதியின் பெயர் பாபு. அவர் 2015 ல் ஊர் தலைவராக இருந்தார். ஜமுனா தான் ஊர் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அவர் பாபுவின் சகோதரி அவர் வெளியூரில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். பாபு தான் ஊர் நிர்வாகத்தை பார்த்துகொண்டார். பாபு மீது மணல் திருட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 2ம் வாதிக்கு பல வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அவர் நீதிமன்றத்திற்கு வருகை தந்துள்ளார். நான் பணம் மோசடி செய்ததாக என் பெயரில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. 4ம் வாதி மீது சந்தன கடத்தல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண்.150/22, 150/24, 150/27. தாவா சொத்தின் சர்வே எண்.150/14 என்றால் அது தவறு. தாவா சொத்தின் பழைய சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்து ஊருக்கு கிழக்கில் உள்ளது. ஊரில் தாவா சொத்து கடைசி இடம் என்றால் சரிதான். தாவா சொத்தில் ரோடு இல்லை. தாவா சொத்தின் நடுவில் ரோடு எதுவும் செல்லவில்லை. தாவா சொத்தில் ரோடு உள்ளது என்றால் அது பொய். தாவா சொத்து ஊரில் ஓரமாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் பொது கிணறு உள்ளது. தாவா சொத்தில் பிரதிவாதி செட்டு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. ரோட்டில் இருந்து 15 அடி தள்ளி தாவா சொத்தில் பிரதிவாதி காம்போண்டு சுவர் கட்டியுள்ளார். தாவா சொத்து கிராமத்திற்கு சொந்தமான கிராம நத்தம் புறம்போக்கு. கிராம நத்தம் என்றால் ஊர் மக்கள் வசிக்கும் இடம் என்றால் சரிதான். கிராமநத்தம் யார் அனுபவத்தில் உள்ளதோ அவர்களுக்கு பாதியப்பட்டது என்றால் தாவா சொத்து யார் அனுபவத்திலும் இல்லை. தாவா சொத்தில் ஆடு, மாடு மேய்க்கமுடியாது. நரசிம்மநாயுடு பிரதிவாதியின் தாத்தா. அவரை எனக்கு தெரியும். தாவா சொத்து ஆதியில் நரசிம்மநாயுடுவிற்கு பாதியப்பட்டது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**